செ.வெ.எண்: 364 நாள்: 18.06.2011

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 17.6.2011 அன்று தலைமைச் செயலகத்தில் வேளாண்மைத் துறையின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்கள்.

தமிழகத்தில் விவசாய பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படவும், விளைப் பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்திடவும், வேளாண் நிலப்பரப்பினை அதிகரிக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி, நெல், கரும்பு, பருத்தி, பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரித்து, விவசாய பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து எடுக்குமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்கள்.

மாநிலத்தில் வேளாண்மை வளர்ச்சிக்குத் தேவையான நீராதாரம், விதை உற்பத்தி, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவைகள் விவசாயிகளுக்கு தேவையான அளவு தட்டுப்பாடின்றி கிடைக்கவும், கூட்டுறவு வங்கிகள் மூலம் பயிர் கடன் வசதிகளைப் பெறுவதற்கும், விவசாயிகளிடையே தொழில்நுட்ப வசதிகளை அதிகரித்து அவர்களிடையே தகவல் பரிமாற்ற வசதிகளை அதிகரிக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆலோசனைகளை வழங்கினார்கள்.

தமிழக மக்களுக்கு என்றென்றும் உணவு பாதுகாப்பு அளிக்கப்படும் பொருட்டு, உணவுப் பொருட்களின் உற்பத்தியை இரண்டு மடங்காக்கவும், விவசாயிகளுக்குக் கிடைக்கும் வருமானத்தை தற்போதுள்ள நிலையிலிருந்து இரண்டு அல்லது மூன்று மடங்காக உயர்த்தி, உழைப்பின் பயனை அவர்கள் பெற்றிடவும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு சந்தையில் நல்ல விலை கிடைத்திட வேளாண் வணிக மையங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, நுண்ணிய பாசன முறையை மேம்படுத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

மேலும், இந்த ஆய்வின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வேளாண் துறை அதிகாரிகளுக்கு பல அறிவுரைகளை வழங்கினார்கள்.

1) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடப்பு 2011–12 ஆம் ஆண்டில் 42 லட்சம் ஹெக்டேரில் 115 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யத் தேவையான அனைத்து முயற்சிகளையும் தொய்வின்றிச் செய்ய அறிவுறுத்தினார்கள்.
2) தமிழ்நாட்டில் உள்ள அணைகளில் உரிய நேரத்தில் நீர்பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட்டுள்ள வாய்ப்பினைப் பயன்படுத்தி, நடப்பு கார்/குறுவை/சொர்ணவாரி பருவத்தில் 3.2 லட்சம் ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்படுவதை உறுதி செய்ய அறிவுரை வழங்கினார்கள்.
3) நடப்பு ஆண்டில் 9 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட வேண்டும்.
4) விவசாயத் தொழிலாளர்கள் பற்றாக்குறையை ஈடுசெய்யும் விதமாக துல்லிய சமன்படுத்தும் கருவி, விசை கோனோ களை எடுக்கும் கருவி, நெல் நடவு இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம், கரும்பு அறுவடை இயந்திரம் போன்ற வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகளை வேளாண் பொறியியல் துறை மற்றும் வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மிகக் குறைந்த வாடகைக்கு கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும்.

5) நீடித்த நிலையான கரும்பு முனைப்புத் திட்ட தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி, 4,000 ஹெக்டேர் பரப்பில் கரும்பு உற்பத்தி திறனைப் பெருக்க ஆவன செய்யப்பட வேண்டும்.
6) பயறு வகைகள் சாகுபடியினை தீவிரப்படுத்தி துவரை, உளுந்து, பச்சைப்பயறு போன்ற பயறு வகைப் பயிர்களை தனிப் பயிராக சாகுபடி செய்யும் வகையில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
7) துல்லிய பண்ணையம் தொழில்நுட்பம் பெருமளவில் செயல்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
8) 5,000 ஹெக்டேர் பரப்பில் மா, முந்திரி மற்றும் வாழைப் பயிர்களில் மிக அடர்த்தி நடவு முறை மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
9) நெல்லி மற்றும் எலுமிச்சை சாகுபடிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு 1700 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட வேண்டும்.
10) தகவல் தொழில்நுட்பம் மூலம் விவசாயிகளுக்கு முக்கிய தொழில்நுட்பங்கள் குறித்த விவரங்களை விரிவாக்கப் பணியாளர்கள் மூலம் விரைந்து அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு நிதித் துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நிதித் துறையின் முதன்மைச் செயலாளர், வேளாண்மைத் துறையின் முதன்மைச் செயலாளர், வேளாண்மைத் துறை, தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மற்றும் சர்க்கரைத் துறை ஆகிய துறைகளின் ஆணையர்கள், விதைச் சான்று துறையின் இயக்குநர் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு : இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 18.6.2011

2/2